[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 மார்ச் 14

திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1979) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, ஏகமனதாக நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பெற்றது.

(ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும், என்று கேட்டு, ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் 1386, 1387 பசலியின் போது பாதிக்கப்பட்ட காரணத்தால் அந்த மக்கள் குத்தகையைக் கொடுக்க முடியாது, பூரா குத்தகையையும் கொடுக்க முடியாது என்கிற காரணத்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்குக் கொடுக்கப்படுகிற இந்தப் பாதுகாப்பு 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதியோடு முடிவு அடைகிறது. அதை நீட்டிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்தில், இதற்காக நிரந்தரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கொண்டு வரப்படும் சட்ட முன்வடிவை, இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கும், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினகர்ளும் இங்கே இல்லாவிட்டாலும், எனக்கு மிக நன்றாகத் தெயும், இந்தத்

*1979, பிப்ரவரி 19 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

திருத்தச் சட்டத்தை, குத்தகைதாரர்களைப் பாதுகாக்கும் சட்டத்தைப் பற்றி, இங்கே இருந்தால் நிச்சயமாக ஆதரிப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே குறைபாடுகள் இருந்தால் அதைக் சுட்டிக்காட்ட இங்கே வந்து இருப்பார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் நிகழ்ச்சிகளை கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள், இந்தச் சட்டத்திலே குறைபாடுகள் இல்லை என்ற காரணத்தால் தான், அவர்கள் இங்கே வரவில்லை. இல்லையென்றால், நாட்டு மக்களின் நலன் கருதி, குத்தகைதாரர்களின் நலன் கருதி, அந்தக் குறைகளை சுட்டிக்காட்டுவதற்கு இங்கே நிச்சயமாக வந்து இருப்பார்கள். இதிலே குறைபாடுகள் இல்லாத காரணத்தால் இங்கே இருந்து சுட்டிக்காண்பிக்க தேவை இல்லை என்ற காரணத்தால் அவர்கள் வரவில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1979) சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS